**தலைப்பு 297 – கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜுலை 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானம் பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி நிதியத்திலிருந்து திறைசேரி பிரதி செயலாளரிற்கு வழங்கியிருந்த கடன் தொகையை திணைக்களத்தினால் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய வருமானத்தில் 1/3 பங்கின் அரைவாசியூடாக தீர்த்துக் கொள்ள இடமளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் கடன் தொகைக்காக குறைத்துக் கொண்ட ரூபா 127,849,052 ஆன தொகை, மாதாந்த கணக்கு பொழிப்பு மூலம் வருமானத்திலிருந்து மீள் செலுத்தலொன்றாக காட்டியிருந்த காரணத்தால் கம்பனி பதிவாளரின் கட்டணம் (20.03.02.01) வருமானத் தலைப்பின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குவதுடன் அது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திடம் எழுத்து மூலம் ஆலோசனை பெற்று 2023 ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | உள்நாட்டுக் கடனை மீள்செலுத்துதல் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறியீட்டை அங்கீகரித்துக் கொண்டு அதனூடாக வழங்கி இருந்த கடன் தொகையை தீர்க்க வேண்டியதுடன் வருமானத்தில் இருந்த மீள்செலுத்தல் ஒன்றாக காட்டக் கூடாது. |

**(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சின் பிரகாரம் முற்பணம் செலுத்தல் ரூபா 8,362,506 ஆக இருந்ததுடன் நிதி செய்லாற்றுகை கூற்றில் முற்பணம் செலுத்தலாக ரூபா 8,358,506 தொகை காட்டப்பட்டதால் நிதி நிலைமை கூற்றில் முற்பணக் கணக்கு மீதி ரூபா 4,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இடமாற்றம் பெற்று வந்த அலுவலர் ஒருவரின் ரூபா 4,000 ஆன விஷேட முற்பண கடன் மீதி முற்பண பீ கணக்கில் சரியாக குறிக்கப்பட்ட போதும், நிதி செய்லாற்றுகை கூற்றில் சீராக்க முடியாது போனதால் முற்பண செலுத்தல் குறைவாக குறிக்கப்பட்டுள்ளது. அதனை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | வேறு திணைக்களங்களினால் முற்பணக் கணக்கிற்கு மேற்கொண்ட வரவு வைத்தல் இனங்கண்டு சீராக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 இன் 7 இலக்க கம்பனி சட்டத்தின் 131(1) மற்றும் (2) பிரிவு பிரகாரம் பதிவ செய்த கம்பனிகள் வருடாந்த அறிக்கையை கையளிக்காத காரணத்தால் மீளாய்வாண்டிற்கு நிலுவை வருமானம் ரூபா 3,389,232,000 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதன் 1/3 பகுதியான ரூபா 1,129,744,000 வை திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டியதாகும். | இது பற்றி விடயங்களை கண்டறிந்து விரைவில் அறிக்கையிட நடவடிக்கை எடுப்பதாக. | வருடாந்த அறிக்கை கோவைபடுத்தலை ஊக்குவித்தல் மற்றும் வருடாந்த அறிக்கையை கோவையிடாத கம்பனிகளிற்காக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொண்டு நிலுவை வருமானத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1891 இன் 16 இலக்க சங்கங்கள கட்டளை சட்டத்தின் (123 ஆம் அதிகாரம்) 8(1) (ஈ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் வருடாந்த அறிக்கை கோப்பிட வேண்டிய செயற்பாட்டு சங்க எண்ணிக்கை 15,884 இல் 60 | அரச கருத்திட்டம் அல்லது தனியார் துறை கருத் திட்டங்களிற்காக தேவையான பின்புலத்தை அந்த சமூகத்தினூடாகவே | தொடர்சியாக செயற்படும் சங்கங்களை சரியாக இனங்கண்டு, பெற வேண்டிய வருமானத்தை சேகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சங்கங்கள் வருடாந்த அறிக்கையை கோப்பிட்டு ரூபா 60,000 ஆன வருமானத்தை சேகரித்திருந்தது. எனினும் அவ்வாறு செய்யாத சங்கங்களின் செயற்பாட்டு நிலைமையை பரிசோதித்து பெற வேண்டிய வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்படுத்துவதற்காக சங்கங்களை பதிவு செய்துள்ளதாகவும் அக் கருத்திட்டம் நின்றதன் பின்னர் அல்லது ஆரம்பம் முதல் எவ்விதத்திலும் செயற்படாததன் மீது இந்த சங்கங்கள் செயலற்ற நிலைக்கு ஆகுவதாக. அதனால் இந்த சங்கங்கள், சங்கங்கள் கட்டளை சட்டத்தில் குறிப்பிடப்படும் முறைமையை பின்பற்றி 242 சங்கங்களின் பெயர்கள் பதிவழிக்கப்ட்டுள்ளதுடன் மற்றைய சங்கங்களின் பெயர்களை பதிவழிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக. | |

**2.2 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 1.1.7 இற்கு இணங்க இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களின் கடன் மீதி இடமாற்றம் பெற்று 03 மாதங்கள் கடந்த பின்னர் தீர்க்கப்படாத கடன் மீதிகள் என காட்டாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 120,741 இற்கான தொகையொன்று இடமாற்றம் பெற்று 22 வருடங்களுக்கும் 33 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூன்று உத்தியோகத்தர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒவ்வொரு அமைச்சு மற்றும் திணைக்களங்களிலிருந்து விபரங்களை 2023 ஆண்டு மே மாதத்தில் கோரியுள்ளதுடன், தகவல் கிடைத்த பின்னர் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அரச நிதி சுற்றறிக்கையின் 01/2020 இல் I பகுதியின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நி.பி. 113(6)(ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உதவி கம்பனி பதிவாளர் பதவியின் அங்கீகரிக்கப்ட்ட 7 அலுவலர்களில் 2022 திசெம்பர் 31 திகதி மூவருடைய வெற்றிடங்கள் நிலவியதும் அவற்றில் ஒரு பதவி 3 வருட காலத்திலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது. | பதவிப் பெயர் திருத்தப்பட்டுள்ளதால் திருத்திய ஆட்சேர்ப்பு திட்டத்திற்காக அரச செவை ஆணைக்குழுவின் அங்கிகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட துறையின் கீழ் ஒரு அலுவலர் மற்றும் திறந்த அடிப்படையில் ஒரு அலுவலரையும் ஆட்சேர்க்க குழு இணங்கியுள்ளதாக. | கம்பனிகளை பதிவு செய்யும் வழர்ச்சியொன்று காணப்படும் பின்னியில் மேற்பார்வை பொறுப்பான நிரைவேற்று அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | தகவல் தொழிநுட்ப பிரிவில் அங்கீகார 11 அலுவலர்களில் பணிப்பாளர் உள்ளிட்ட 8 பதவிகள் 2022 திசெம்பர் 31 திகதி வெற்றிடமாக காணப்பட்டது. e – ROC கணனித் தொகுதியில் உடன்படிக்கை பிரகாரம் இரண்டாம் பராமரிப்பு ஆண்டளவில் தொகுதியை நடாத்திச் செல்லும் அறிவு முழுமையாக பரிமாற்றமடைந்திருக்க வேண்டிய போதும் இப் பிரிவிற்குரிய வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தால் தொகுதியின் முற்செயற்பாடு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு போன்றே தொகுதி முறிவடைவு இன்றி திணைக்கள நடவடிக்கைகளை சிறந்த மட்டத்தில் நடாத்திச் செல்ல பாதகமான தாக்கமொன்றாக இருக்க முடியுமென அவதானிக்கப்பட்டது. | இவ் வெற்றிடம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு அவ்வப் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது டன் அரச சேவை ஆட்சேர்ப்பு செயற்பாடடை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அலுவலர் குழுவிற்கு கோரிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளதாக . | திணைக்கள கடமை பணிகள் நிகழ்நிலை e – ROC கணனித் தொகுதியினூடாக இடம் பெறுவதால் தகவல் தொழிநுட்ப பிரிவின் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரண்டாம் நிலை பதவியொன்றான கம்பனி பரிசோதகர் பதவிக்காக 10 அங்கீகார பதவிகளில், 05 பதவிகள் 2022 திசெம்பர் 31 திகதி வெற்றிடமாக காணப்பட்டது. அவற்றில் இரண்டு பதவிகள் | கம்பனி பரிசோதகர் அலுவலர் பதவி முக்கிய ஆட்சேர்பு ஒன்றாகையால் வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள அரச | கம்பனி பரிசோதகர் பதவிற்கான ஆட்சேர்ப்பை துரிதமாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்க வேண்டிய பதவிகளாகும். இவ் வெற்றிடங்கள் காரணமாக 2007 இன் 7 இலக்க கம்பனிகள் சட்டத்தை மீறும் கம்பனிகளிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல் குறைந்த வேகத்திலானதன் மீது வருமானம் அறவிடும் செயற்பாட்டிற்கு பாதகமாக தாக்கம் செலுத்த முடியுமென அவதானிக்கப்பட்டது. | சேவையின் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அலுவலர் குழுவிற்கு கோரிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளதாக | |
| (ஈ) | உதவி/ பிரதி கம்பனி பதிவாளர் (கட்டுப்பாடு) பதவி மற்றும் ஒராண்டிற்கு அதிக காலமாக நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | உதவி கம்பனி பதிவாளர் (கட்டுப்பாடு) பதவிற்காக உத்தியேகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்காக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவலகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்ச்சி அமைச்சின் செயலாளரிற்கு கோரிக்கை சமர்ப்பித்துள்ளதாக. | திணைக்கள நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |